DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : CC **91/2024** |
| Deposition of Witness for | : PW |
| Name | : டாக்டர்.சுதா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 6th February 2026.

**எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் தனியாக மருத்துவமனை நடத்திவருகிறேன. இதற்கு முன்பு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது 06.05.2013 அன்று மாலை 5.30 மணியளவில் ஆசிர்வாதம் என்னும் நபர் தனது மனைவி பூமாரி என்பவருடன் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின்படி 06.05.2013 அன்று சுமார் மாலை 4 மணியளவில் பெருங்கோட்டூர் வேதக்கோவில் அருகே அடையாளம் தெரிந்த 2 நபர்கள் அரிவாள்வைத்து வெட்டியதில் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை பரிசோதித்தில் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. இடது முழங்கையில் 7x5x 3 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.,

2. வலது தோள்பட்டையில் 2x1x1 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

3. இடது காதின் அருகில் 0.5x0.5x0.5 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவரை பரிசோதித்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருடைய நாடித்துடிப்பு மற்றும் ரத்த அழுத்தம் சீராக காணப்பட்டது. அவருடைய முக்கியமான உறுப்பு மண்டலங்கள் சாதாரண நிலையில் இருந்தன. அவரால் அவரது இடதுகையை தூக்க இயலாத நிலையில் இருந்தார். அவருக்கு 06.05.2013 அன்று முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக அன்றைய தினமே திருநெல்வேலி அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அவருக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர்படத்தில் அவரது இடதுமுழங்கை மற்றும் வலது தோள்பட்டையில் எந்த எலும்புமுறிவும் காணப்படவில்லை. அவருக்கு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அவரது இடது முழங்கையில் உள்ள முக்கியமான அல்னார் என்னும் நரம்பு பாதிப்பு ஏற்பட்டு அதற்காக அறுவைசிகிச்சை 29.05.2013 அன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. நுண்கதிர் படம் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை விபர அறிக்கையின் அடிப்படையில் முதலாவது மற்றும் மூன்றாவது காயங்கள் சாதாரண காயங்கள் என்றும், 2 வது காயம் கொடுங்காயம் என்றும் சான்று அளித்தேன். **காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி 3 காயங்களும் காயம்பட்ட நபர் கூறியுள்ள நாள் நேரத்தில் அவர் கூறிய விதத்தில் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புண்டு.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

ஆசிர்வாதம் சிகிச்சைக்கு வரும்போது போலீசாரால் வழங்கப்பட்ட மருத்துவ நமூனா எதுவும் உடன் கொண்டுவந்தாரா என்றால் இல்லை. ஆசிர்வாதம் சிகிச்சைக்கு வந்தபோது சட்டை அணிந்திருந்தாரா என்றால் எனக்கு அது ஞாபகம் இல்லை. ஆசிர்வாதம் சட்டை அணிந்து வந்திருந்தால் மேற்சொன்ன காயங்களின் தன்மை பொறுத்து அவரது சட்டையில் ரத்தகரை ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. ஆசிர்வாதம் தனக்கு எந்தந்த இடங்களில் வெட்டுக்காயம் ஏற்பட்டது என என்னிடம்குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 1 முதல் 3 காயங்களை சுற்றி ரத்தம் உறைந்திருந்ததாகவோ அல்லது ரத்தம் வடிந்து கொண்டிருந்ததாகவோ அ..சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் வெட்டுக்காயம் என்று குறிப்பிட்டிருந்தாலே அதில் ரத்தம் வந்துகொண்டிருந்தது என்றுதான் அர்த்தம்.

போலீசார் பதிவு செய்த எனது வாக்குமூலத்தில் 1 முதல் 3 காயங்களை சுற்றி ரத்தம் வடிந்துகொண்டிருந்ததாக குறிப்பிட்டு நான் கூறவில்லை என்றால் சரிதான். அரிவாள் எதுவும் என்னிடம் காண்பித்து அதன் மூலமாக 1 முதல் 3 காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டா என்று போலீசார் என்னிடம் கருத்துரை பெற்றார்களா என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. கருத்துரை பெற்றிருக்கலாம். போலீசார் பதிவு செய்த எனது வாக்குமூலத்தில் அவ்வாறு எந்த கருத்துரையும் நான் கொடுக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. காயம்பட்ட நபருக்கான நுண்கதிர்படத்தை நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு நுண்கதிர்படம் எடுக்கவில்லை என்றாலும், அந்த நுண்கதிர் படத்தை பார்த்து நான் கருத்து தெரிவிக்கவில்லை என்றாலும், காயம்பட்ட நபருக்கு ஏறபட்ட 2 வது காயம் கொடுங்காயம் என நான் கருத்துரை வழங்கியது தவறானது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**